20th January 1964] [திரு. செ. மாதவன்]

கேள்வி நேரத்தை ஒரு மணி நேரம் ஆக்குவதற்கும் தாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : We had question time for one and half hours on some days. At that time the hon. Member had not raised any point of order. Now simply because answers to some questions are not ready, the hon. Member is raising the issue. There is no point of order in this.

III—EXPLANATORY STATEMENT BY A MEMBER *re* : THE BEHAVIOUR OF A POLICE CONSTABLE.

* திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஜனவரி 18-ம் தேதி என்னைப் பற்றிய ஒரு சம்பவம் பற்றி இந்த சபையின் மேஜையின் மீது ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி "பை வே ஆஃப் பெர்சனல் எக்ஸ்பிளெனேஷன்" நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சம்பவம் சம்பந்தமாகப் பூரா விவரங்களையும் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தச் சம்பவம் 'க்ளோஸ்டு ஃபார் வெகிகுலர் டிராபிக்" என்று போடப்பட்ட மேலக் கோபுர வாசலில் நடந்ததாகச் சொல்லுவது சரியல்ல. அதற்கு வெளியிலுள்ள மேல ஆவணி மூல வீதியில் நடந்தது. அந்த இடத்திலே எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. அந்த இடத்திலே ரிக்ஷாவை நிறுத்திவிட்டு, கோவிலுக்கு நடந்து செல்வதற்காக இறங்க நினைத்தேன். அப்பொழுது அங்கிருந்த டின். நம்பர் 135 கான்ஸ்டபிள், ரிக்ஷாக்காரனின் முதுகைப் பிடித்துத் தள்ளினர். "நான் இறங்கி கொள்கிறேன்" என்று சொன்னபோதும், பழையபடி ரிக்ஷாக்காரனைத் தள்ளியதால், வெளியூர் கான்ஸ்டபிள் என்று நான் தெரிந்து கொண்டதால் "நான் லோகல் எம்.எல்.ஏ., இறங்கிக் கொள்ளுகிறேன்" என்று சொன்னேன். "எம்.எல்.ஏ. யாயிருந்தால் என்ன, யாராய் இருந்தால் என்ன" என்று அவர் உறக்க கூறினர். பக்கத்திலே 20, 30 பொது மக்கள் கூடிவிட்டார்கள். "இந்த மாதிரி அவமரியாதையாகப் பேசினல், மேலதிகாரிகளிடம் நான் கம்பிளேயின்ட் செய்வேன்" என்று சொன்னேன். திரும்பவும் அவர் "எம்.எல்.ஏ. யாயிருந்தால் என்ன, யாராய் இருந்தால் என்ன" என்று சொன்னர். நான் அவருடைய நம்பர் என்ன, கம்பிளேயின்ட் செய்யப் போகிறேன், என்று சொன்னேன். அதற்கு அவர் "ரிக்ஷாவை சார்ஜ் செய்திருக்கிறேன், ரிக்ஷாவைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போக வேண்டும்" என்றார். இருவரும் பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றோம். அங்கே போய் பத்து பதினைந்து நிமிடங்களில் நான் ஒரு கம்பிளேயின்ட் எழுதினேன். அதற்குள் ஊரிலே வதந்திகள் பரவியதால், ஏ.எஸ்.பி. அவர்களும் அங்கே வந்து விட்டார். அவரிடம் கம்பிளேயின்டைப் பூர்த்தி செய்து கொடுத்தேன். ஆகவே, இந்த அறிக்கையில்

[திரு. வை. சங்கரன்] [20th January 1964

இரண்டாவது பாராவில் கூறியபடி " நோ என்டிரி ரோடில் நான் போக முயற்சித்ததாகவும் அதை மேற்படி கான்ஸ்டேபிள் தடுத்த தாகவும், நான் அதன் பேரில் ஏதோ கூப்பாடு போட்டதாகவும்" கூறப்பட்டு இருக்கும் விவரங்கள் அனைத்தும், கற்பனையாகவும், அப்பட்டம் உண்மைக்கு மாருகவும் இருக்கின்றன என்று கூற விரும்புகிறேன். ஏ.எஸ்.பி. என்னுடைய ரிட்டன் கம்பிளெய்ன்டைப் பெற்றுக்கொண்டபோது, மேற்படி கான்ஸ்டபிள்மீது மரியாதைக் குறைவாகப் பேசியதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக வாக்களித்தார். அடுத்த நாள் டி.ஐ.ஜி. என்னுடன் போனில் பேசினர். அவரிடம் பூரா விவரங்களையும் சொன்னேன். அவர் எனக்கு அவமரியாதை நேர்ந்ததற்கு மன்னிப்புக் கேட்கும் வகையிலும் வெகுவாக வருத்தம் தெரிவித்தார். நான் அவர் வருத்தம் தெரிவித்ததற்கு மரியாதை கொடுக்கும் வகையில், " இட் டஸ் நாட் மேட்டர்" என்று கூறிவிட்டு, அதே சமயம் இந்த சம்பவம் பொது நலனைப் பாதிக்கும் விஷயமாதலால், கண்டிப்பாக அந்த கான்ஸ் டேபிள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன். அவரும் அப்படிச் செய்வதாக உறுதி கூறினர். இந்த ஒரு தடவைக்குப் பின் டி.ஐ.ஜி. என்னை திருப்பற்றி பார்க்கவோ, பேசவோ இல்லை. சில தினங்கள் கழித்துத்தான் டி.எஸ்.பி. யுடன் பேச முடிந்தது. நான் அவரிடம் விவரங்களைக் கூறியதும், அவரும் நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்தார். ஆதலால் நான் டி.ஐ.ஜி. யிடம் யாராலும் போகக்கூடாது என்று கான்ஸ்டேபிள் சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது சரியல்ல. அவ் வாறு சொல்லப் பிரமேயம் இல்லை. டி.ஐ.ஜி. யிடம் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று நான் சொன்னதுபோல் கூறப் பட்டிருப்பதும் சரியல்ல. அம்மாதிரி நான் சொல்லவில்லை. நட வடிக்கை எடுக்கவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறேன். சம்பவத்திற்குப் பின்னுல்கூட சில வாரங்களில் டி.எஸ்.பி., ஏ.எஸ்.பி. அவர்களை சந்திக்க நேரிட்ட பல தடவைகளிலெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்தியுள்ளேன். அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்று அவ்வப்போது உறுதி கூறி வந்தார்கள். கடைசி ஓரிரு தடவைகளில் மதுரை டி.எஸ்.பி. இந்த விஷயம் திருநெல்வேலி டி.எஸ்.பி.-க்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

நான் சொன்ன விவரங்களை எல்லாம் "ஜென்டில்மென்ஸ் வார்த்தை" ஆக, கூடுதலோ குறைவோ இல்லாது அப்படியே ஏற்றுக்கொண்டது போலவும், தகுந்த நடவடிக்கைகள் எடுக்கத் தான் முற்பட்டுள்ளனர் போலவும் போலீஸ் அதிகாரிகள் ஒருபுறம் பசப்பு வார்த்தைகள் பேசியும், மற்றொரு புறம் கான்ஸ்டேபிள் தற் காப்புக்காக கொடுத்த வெர்ஷனையே வைத்துக்கொண்டு, அந்த வெர்ஷன் வேறுவிதமாக இருக்கின்றதே, தாங்கள் அதுபற்றி என்ன சொல்கிறீர்கள் என்று என்னை இன்றுவரை விசாரிக்காமல், அதை முழுவதாக ஏற்றுக்கொண்டும், என்னுடைய கம்ப்ளெயின்ட் ஆதார மற்றது என்றும், அதற்கு மேலாக "குதிரை குப்புறத் தள்ளி

20th January 1964] [திரு. வை. சங்கரன்]

குழியையும் பறித்தது போல" நான் ஏதோ "நோ எண்டிரி" ரோடில் போக முயற்சித்ததாகவும், கூப்பாடு போட்டதாகவும் 'Enqiury reveals' என்று பழிசுமத்தி முடிவு கட்டினால் இதில் எவ்வளவு நீதி, நேர்மை அடங்கியுள்ளது என்பதை அளவிட, பாதிக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினரைக்கொண்ட இந்தச் சபைக்கே நான் விட்டுவிடுகிறேன். அதற்கும் மேலாக ஒரு தனிப் பட்ட நபர் அவமதிக்கப்படவில்லை, எம்.எல்.ஏ. என்ற ஹோதாவில் அவமதிக்கப்பட்டு இருக்கிறார் என்பதை உணர வேண்டும். எம்.எல்.ஏ.-க்கும் தன்னுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள இயலாத நிலைக்கு விடப்பட்டுவிட்டால், அதோடுகூட ஒரு கான்ஸ்டபிளின் வார்த்தைக்கு இருக்கும் மதிப்புக்கூட ஒரு எம்.எல்.ஏ.-யின் வார்த்தைக்கு மதிப்பு இல்லையென்றால் எம்.எல்.ஏ.-க்கள் எவ்வாறு பொதுப்பணியில், மக்களின் கௌரவத்தையும், நன்மையையும் பாதுகாப்பதில் தெம்பும் தைரியமும் உடையவர்களாக இருக்க முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இனிமேலாவது சட்டசபை அங்கத்தினர்களுக்கு இந்த மாதிரி கதி ஏற்படாது சபை பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்த விளக்க உரையை சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

*. திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே இந்த அவையின் ஒரு கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் மதுரையில் தனக்கு நடந்த நிகழ்ச்சிகள் பற்றித் தெரிவித்தார்கள். இந்த அவையில் உள்ள உறுப்பினருடைய மதிப்பு வெளியில் காப்பாற்றப்பட்டால்தான் நாட்டிலே அவர்கள் பணி புரிவதற்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது திரு. சங்கரன் அவர்கள் கூறிய விவரங்களைக் கொண்டு அந்த நிகழ்ச்சி பற்றி ஒரு மறு விசாரணைக்கு உத்தரவிட்டு தக்க தீர்ப்பு வழங்கினால்தான், இந்த அவையின் அங்கத்தினருக்கு மதிப்பு இருக்கும், அதிகாரிகளும் அத்துமீறி நடக்காமல் நல்லதொரு, சீர்பட்ட சூழ்நிலை உருவாக முடியும் இந்தப் பிரச்னை விவகாரத்திற்கு உரிய ஒன்று. இதன்மேல் உறுப்பினர் கொடுத்த விரிவான விளக்கத்தின் அடிப்படையில் ஒரு மறு விசாரணை செய்து தக்க தீர்ப்பு அளித்து உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்படவேண்டும். அதிகாரிகள் அத்து மீறி நடக்காமல் இருக்கும் சரியானதொரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு, அமைச்சரவை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

SRI R. V. SWAMINATHAN rose.

MR. SPEAKER : There can be no debate on this. It is only a personal explanation by Sri V. Sankaran. I am not going to allow any hon. Member to speak on it.

SRI R. V. SWAMINATHAN : I want to submit one thing. Please hear me and then give your decision.

MR. SPEAKER : There can be no debate on this according to rules.

[20th January 1964

SRI R. V. SWAMINATHAN : I want to submit. . .

MR. SPEAKER : There cannot be any debate. The hon. Leader of the Opposition had stated his remarks and had made certain statements. I did not want to stop him at that stage.

SRI R. V. SWAMINATHAN : My point is quite different. . .

MR. SPEAKER : The hon. Member may bring a motion or raise it in any other form.

THE HON. SRI R. VENKATARAMAN : I would like to draw the attention of the House to rule 81 of the Assembly Rules, which says " A Member may, with the permission of the Speaker, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward, and no debate shall arise ".

MR. SPEAKER : There is no use in debating on this. Anybody's talking is not going to help. Unless the hon. Member brings in a motion, it cannot be discussed here. There is no use in wasting time over it. The hon. Member Sri Sankaran wanted to explain himself and therefore I allowed him to speak.

IV—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED POLICE LATHI-CHARE IN KANCHEEPURAM.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri M. Karunanithi. He has referred to an alleged lathi-charge in Kancheepuram by the Police on the 19th instant. It is not clear under what circumstances the lathi-charge was resorted to. It is presumed that it is in the course of ordinary administration of law and order. In that case, this cannot come as an adjournment motion.

(2) VIOLATION OF THE PROHIBITION ACT BY A SUB-INSPECTOR OF POLICE.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan has referred to the statement of a Sub-Inspector of Police, who has given a statement to the press, that Prohibition has failed and that he proposed to violate the Prohibition law. A statement of an individual cannot form the subject-matter of an adjournment motion. An adjournment motion should relate to a matter of recent occurrence, discussion on which cannot be postponed. The matter raised does not deserve any attention and it can never come as an adjournment motion.

V—PRIVILEGE MATTER.

ARREST OF SOME MEMBERS.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan has given a notice of a matter of Privilege about the arrest of two hon Members of this House. I have not received any intimation about it. I will take up this matter tomorrow.